Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 15, 2023

செவ்வாய்க்கிழமை 15 ஒகஸ்ட், 2023 | ஒளி: 09 கதிர்: 062 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



## தீ வைத்தால் நட்டஈடு இல்லை

வரட்சியால் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு தீ வைத்தால் அவற்றுக்கான நட்டஈடு வழங்கப்பட மாட்டாது என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

கடன் மறுசீரமைப்பில் வென்றாலும்

# பிரச்சினைகள் தீர்ந்துவிடாது



கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் வெற்றியடைவதால் மாத்திரம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது என்றும், சரியான தீர்மானங்களுடன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாடும் மக்களும் எதிர்கொண்ட துரதிர்ஷ்டவசமான யுகத்துக்கு எதிர்கால சந்ததியினர் முகம் கொடுக்காத வகையில், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

புதிதாக சிந்தித்து, புதியதொரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லாவிட்டால், இன்னும் 10 வருடங்களில் நாடு மற்றொரு பொருளாதார சவாலை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

“நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக

## அம்பாறையை அபிவிருத்தி செய்வது எனது பொறுப்பு”



நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் அம்பாறை மாவட்டமும் எந்த மதத்தையும் இனத்தையும் ஓரங்கட்டாமல் முழு மாவட்டத்தையும் ஒன்றிணைத்து சிறந்த அபிவிருத்தியை மேற்கொள்ளவதாகவும் மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## 95 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்ற மாம்பழம்

வவுனியா, தவசிகுளம் பிரதேசத்தில் உள்ள கோவிலில், மாம்பழம் ஒன்று, 95 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பிரசவித்த சிசு கைநழுவி கீழே விழுந்து மரணம்

பிரசவ அறையில் வைத்து பிரசவிக்கப்பட்ட சிசு, ஒருசில நொடிகளுக்குள் தரையில் விழுந்து மரணித்த சம்பவம், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## சசித்ரவுக்கு 3 மாத பயணத் தடை



முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர் சசித்ர சேனாநாயக்கவுக்கு 3 மாத வெளிநாட்டு பயணத்தடை விதித்து கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (14) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு எதிராக களத்தில் குதிப்போம்

ஷேன் செனவிரத்ன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கொள்கையளவில் முரண்பாடுகள் இருந்தாலும் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி வைத்து ஜனாதிபதி பதவிக்கு அவரை நியமித்ததை ஆதரிப்பதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாடுக்கு எதிராக செயற்பட்டால் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக களத்தில்

தொடர்ச்சி P2

## இரு சுவர்களுக்கு இடையில் சிக்கியிருந்த சிறுமி மீட்பு




பாடசாலை ஒன்றில் இரு சுவர்களுக்கு இடையில் சிக்கியிருந்த 7 வயதான சிறுமியை சுமார் 30 நிமிடங்களில் மீட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரே அந்தச் சிறுமியை மீட்டுள்ளனர்.

களுத்துறை, கட்டுகுருந்த றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இரண்டாம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவி ஒருவரே இவ்வாறு திங்கட்கிழமை (14) காப்பாற்றப்பட்டுள்ளார்.

பாடசாலையின் கழிவறை அமைப்புக்கும் சுவருக்கும்

தொடர்ச்சி P2



## கற்கோவளத்தை அகற்ற வேண்டாம்

### மக்கள் சிலர் ஆர்ப்பாட்டம்

எஸ். தில்லைநாதன்

வடமராட்சி, கற்கோவளம் இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கூறி, அப்பகுதி மக்கள் சிலரால் திங்கட்கிழமை (14) முற்பகல் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

அரச நிறுவனங்களுக்கான

## வாகன கொள்வனவு கட்டுப்பாடு நீடிப்பு

அரச நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024 ஆம் ஆண்டிலும் அமலில் இருக்கும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தமிழர் படுகொலைகள் குறித்து

## சர்வதேச விசாரணை நடத்தி நீதி வேண்டும்

### செஞ்சோலையில் சரவணபவன் எம்.பி தெரிவிப்பு



பு. கஜிந்தன்

தமிழருக்கு என்ன நடந்தாலும் சர்வதேசமும் கேட்காது; அயல்நாடான இந்தியாவும் கேட்காது என்று தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன்,

தொடர்ச்சி P2

## குருந்தூர் மலையில் பொங்க அழைப்பு

### மலையை காப்பாற்ற விகாராதிபதி அழைப்பு

செ. கீதாஞ்சன்

குருந்தூர் மலையில் உள்ள ஆதிசிவன் ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி, தமிழ் மக்கள் பொங்கல் பொங்கி வழிபாட்டினை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பௌத்த வழிபாட்டுக்கும்

தொடர்ச்சி P2

## “தலை வெட்டும் காலம் மலையேறி விட்டது”

### மேர்வினின் கருத்து பாரதூரமானது என்கிறார் மனோ

“தமிழரின் தலையை கொய்து வருவேன்” என்று கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி என்றும் இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் அவர் திங்கட்கிழமை (14) வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது: ‘ராஜபக்ஷ குடும்பத்தை திருடர்கள், தரகு பணம் பெற்றவர்கள் என்று தெரிவிக்கும் அவர்,



தொடர்ச்சி P2

“விகாரைகள், மகாசங்கத்தினர் மீது கை வைத்தால்


## தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு வருவேன்”

### மேர்வின் சில்வா எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகளில் கை வைத்தால் அப்படிச் செய்யும் தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு வரவேண்டியேற்படுமென முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்தார்.

பேலியகொடையில் இடம்பெற்ற அரசியல் கூட்ட மொன்றில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தான் வடக்கு, கிழக்குக்கு செல்லவுள்ளதாகவும் பௌத்த விகாரைகளின் மீதோ மகா சங்கத்தினர் மீதோ கைவைக்க முற்பட்டால், தான் வெறுங்கையோடு களனிக்கு வர மாட்டேன் என்றும் தமிழர்களின் தலைகளை கைகளில் எடுத்துக்கொண்டுதான் களனிக்கு வருவேன் என்றும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## மேர்வினின் கருத்தை நியாயப்படுத்த முடியாது

### அனந்தி சசிதரன் அறிக்கை

பு. கஜிந்தன்

மேர்வின் சில்வாவின் உரையை அவரின் கருத்து சுதந்திரம் எனக்கூறி நியாயப்படுத்திவிட முடியாது என்றும் இது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கும் கருத்தாகவே அமைந்துள்ளது என்றும் தெரிவித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா காணப்படுகின்றார் என்றும் தெரிவித்தார்.

அவர், திங்கட்கிழமை (14) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேலும் அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: ‘நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன்; நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளை தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர் மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா



தொடர்ச்சி P2

## மேர்வின் சில்வா மனநோயாளியா?

### சபா குகதாஸ் கேள்வி

நிதர்ஷன் வினோத்

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா ஒரு நீண்டநாள் மனநோயாளியா? அல்லது தன்னை சிங்கள மக்கள் பெருமையாக நினைப்பார்கள் என நினைத்து எல்லை மீறிய நாகரிகமற்ற வார்த்தைகளால் உளறி வருகிறாரா என்று கேள்வி எழுப்பிய வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ், ஜனாதிபதியின் நடவடிக்கை என்ன என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேர்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலையே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

“அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது பல விடயங்களை பேசினாலும் வடக்கு- கிழக்கு தமிழர்கள்



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "அம்பாறையை அபிவிருத்தி செய்வது எனது பொறுப்பு"

சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களினால் ஓரங்கட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரச பாடசாலைகளுக்கு பஸ் வழங்கும் பிரபஞ்சம் (சக்வல) வேலைத்திட்டத்தின் கீழ் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு 75 ஆவது பஸ் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (14) இடம்பெற்ற போது, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முப்படை இராணுவத்தையும் நாட்டின் பொருளாதார பலத்தையும் பயன்படுத்தி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதே வல்லாதிக்க சக்திகள் என்றார்.

பெரிய இராணுவமும் பெரிய பொருளாதாரமும் இல்லாத நாடுகள் மென் வலுச் சக்தியைப் பயன்படுத்துகின்றன என்றும்,மென்வலு அதிகாரத்தின் கீழ், தங்கள் பேச்சுவார்த்தை திறன்கள், தங்கள் இராஜதந்திர திறன்கள் மற்றும் இராஜதந்திர விவகாரங்களில் தங்கள் அனுபவங்களை ஆட்சி செய்ய பயன்படுத்துவதை குறிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இலங்கை தற்போது வங்குரோத்து நாடாக மாறியுள்ளதுடன், நாட்டில் ஸ்மார்ட் வலுவை கட்டியெழுப்ப வேண்டும் என்றே எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிவதாகவும் நாட்டின் பாடசாலைக் கல்வி முறையை பலப்படுத்தி நாட்டில் ஸ்மார்ட் வலுவை பலப்படுத்த முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் 10,151 பாடசாலைகள் உள்ளதாகவும், பிள்ளைகள் வெவ்வேறு பாடத்திட்டங்களை கற்பதாகவும் ஆனால் அவை யாவும் பழைய பாடத்திட்டங்கள் எனவும், அவை புதுப்பிக்கப்பட்டு கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சிலர் மேடைகளில் ஏறி, தகவல் தொழில்நுட்பப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்று சத்தமாக கூறுகின்றனர். மாணவர்களுக்கு கணினி வாங்கும் அளவிற்கு பொருளாதாரம் வலுவாக இல்லை.

நாட்டில் உள்ள அனைத்தும் ஏலம் விடப்படுவதாகவும், நாட்டின் வளங்கள் 24 மணி நேரமும் விற்கப்படுகின்றன என்றும், இது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருவதாகவும், ரூபவாஹினி நிறுவனத்திற்கு சொந்தமான ஐ சேனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுகிறது.

புதிய முதலீட்டாளர்களை அரச ஊடகங்களுடன் இணைக்கும் ஒழுங்கு முறை உள்ளதாகவும், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தமது சொந்த சொத்தைப் போல, தான் நினைத்தது போல, நினைத்த நபர்களுக்கு விற்கும் சூதாட்டம் அரங்கேறி வருகிறது.

அரசாங்கத்தின் வளங்களை விற்கும் சூதாட்டத்திற்கு எதிராக நாம் எழுந்து நிற்க வேண்டும் என்றும், நாட்டின் வளங்களும், நாட்டின் சொத்துக்களும் யாருடைய தனிச் சொத்து அல்ல என்றும் தெரிவித்தார்.

## 95 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்ற மாம்பழம்

தவசிகுளம் ஸ்ரீ விநாயகர் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்ற விசேட பூஜையின் போது, பூஜை தட்டும் மற்றும் மாம்பழம் ஏலத்தில் விடப்பட்டது. அப்போது டொம் ரி.ஜே.சி வகையைச் சேர்ந்த இந்த மாம்ப ழமே இவ்வாறு ஏலத்தில் விடப்பட்டது.

இலண்டனில் இந்து வந்திருந்த ஜோடி ஒன்றே, இந்த மாம்பழத்தை ஏலத்தில் பெற்றுக்கொண்டுள்ளது.

மாம்பழம் ஒன்று இவ்வாறான தொகைக்கு ஏலத்தில் பெறப்பட்டது. இதுவே முதல் தடவையாகும்.

## சசித்ரவுக்கு 3 மாத பயணத் தடை

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக்கில் ஆட்ட நிர்ணயம் செய்தமை தொடர்பில் முன்னாள் தேசிய கிரிக்கட் வீரருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய சசித்திர சேனாநாயக்க நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சச்சித்ர சேனாநாயக்கவுக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை முன்வைக்க விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

2020 நவம்பர்- டிசெம்பர் மாதங்களில் ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக்கில் பங்கேற்ற இரண்டு கிரிக்கெட் வீரர்களை துபாயில் இருந்து தொலைபேசி அழைப்புகள் மூலம் ஆட்டநிர்ணயம் செய்ய அணுகியதாக சச்சித்ர சேனாநாயக்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## தலை வெட்டும் காலம்

அந்த குடும்பத்துடனேயே குடும்பம் நடத்தினார் என்பதும் நாடறிந்த சங்கதி. ஒருவேளை அத்தகைய திருட்டு தரகு பணம் பெரும் பிரச்சினையால், ராஜபக்‌ஷர்களுடன் நடத்திய குடும்பம் பிரிந்ததோ என்ற கேள்வியும் எப்போதும் இந்நாட்டு மக்கள் மனங்களில் இருக்கும் சங்கதி. எல்லாவற்றையும் மிஞ்சிய உலக மகா கேலிகூத்து என்னெவென்றால், உலகத்துக்கு அஹிம்சையை போதித்த போதிசத்துவர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரை போன்றவர்களிடமிருந்து பௌத்தை போதிசத்துவர்தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும்.

முன்னையை ராஜபக்‌ஷ ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இவர் சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.

நாட்டில், விகாரைகளையோ, கோவில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும். அந்தச் சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

இவரை பாரதூரமானவராக எடுக்க தேவையில்லை. ஆனால், இவரது கருத்து பாரதூரமானது. நாட்டில் இன மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராக சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தலைவர்களான ராஜபக்‌ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பிரச்சினைகள் தீர்ந்துவிடாது

மாத்தளை புனித தோமஸ் ஆண்கள் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழாவில் ஞாயிற்றுக்கிழமை (13) முற்பகல் கொண்டபோதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் துறைகளையும் நவீனமயமாக்கி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தனது எதிர்பார்ப்பு என்றும், அதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ள, தொழில்நுட்ப ஊக்குவிப்பு சபை மற்றும் நாட்டில் டிஜிட்டல் மாற்றத்தை துரிதப்படுத்த டிஜிட்டல் மாற்ற ஆணைக்குழு ஆகியவற்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக சிலர் நீதிமன்றம் சென்று இதைத் தடுக்க முயன்றனர்.

அதன்போது முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சினைதான், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான விடயம். ஆனால் தற்போது அனைத்து ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கும் 9% வட்டி வழங்குவதற்கான சட்ட வரைவு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தத் திட்டத்தை நிறுத்த எந்தக் காரணமும் இல்லை.

அரசியலமைப்பின் 04 ஆவது சரத்தின்படி, நிதி அதிகாரங்கள் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கேயன்றி வேறு எவருக்கும் இல்லை. மேலும், இது தொடர்பாக தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் தற்போது உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது" என்றார்.

## ரணிலுக்கு எதிராக களத்தில் குதிப்போம்

இறங்குவோம் என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் படதும்பர தொகுதியின் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போராட்டத்தின் போது பதவியை விட்டு கோட்டாபய ராஜபக்‌ஷ வெளியேறிய போது, தற்போதுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய ஒருவரை அந்த பதவிக்கு நியமிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்தது. அதன் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இளைஞர்கள் விரும்பும் ஆட்சி, பொதுஜன பெரமுனவை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் அமைக்கப்படும் என்றார்.

சமூக ஊடகங்களை ஓரளவு ஒழுக்கத்துடன் கையாள வேண்டும் என்றும் அதற்கு சில ஒழுங்குமுறை அமைப்பு தேவை என்பதை ஒரு தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளதால் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபரின் சுதந்திரமும் ஊடக சுதந்திரத்தைப் போலவே முக்கியமானது என்றும் அதற்காக அனைவரும் அக்கறை கொண்டுள்ளனர் என்றார்.

## இரு சுவர்களுக்கு இடையில் சிக்கியிருந்த சிறுமி மீட்பு

இடையே சிறுமி சிக்கிக் கொண்டதாகவும், களுத்துறை மாநகர தீயணைப்புத் துறையின் அவசர ஆம்புலன்ஸ் வந்து ஸ்பேடர் என்ற அதிநவீன கருவியின் உதவியுடன் இரண்டு சுவர்களைத் தள்ளி காப்பாற்றியதாகவும் தலைமை தீயணைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## சர்வதேச விசாரணை நடத்தி நீதி வேண்டும்

படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் இடம்பெற்று பாதிக்கப்பட்ட தரப்புக்களின் நீதி உறுதிப்படுத்தபடவேண்டும் என்று தெரிவித்தார்.

செஞ்சோலை படுகொலை நினைவேந்தலினை அனுஷ்டித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததுடன், இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

"இன்று செஞ்சோலை படுகொலை நினைவுநாள். இவ்வளவு மாணவர்களையும் ஒரே நேரத்தில் கிபிர் விமானத்தினால் குண்டுகள் போட்டு 61பேரை கொன்றார்கள். இதில் மாணவர்கள் மாத்திரம் 54 பேர். இந்த பிஞ்சு குழந்தைகள் அரச இயந்திரத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுவரை இந்தக் கொலை பற்றி சர்வதேசமோ அல்லது உள்ளூரிலோ எந்த விசாரணைகளும் இடம்பெறவில்லை. இதற்கு ஒரு நீதியும் இல்லை; தீர்ப்பும் இல்லை. இது மாத்திரமல்ல இது போல் நவாலியிலும் நடந்தது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்.

இந்த நிலைமை தான் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்தக் கொலைகள் இனப்படுகொலைக்கு மிக ஆதாரமான ஒரு விடயமாக இருந்தாலும் அதை இனப்படுகொலை இல்லை என்று நிரூபிக்க முற்படுகின்றார்கள்.

இந்தக் கொலை சம்மந்தமாக இனியாவது ஒரு சர்வதேச நீதி கிடைக்கபெறவேண்டும். ஆனால் எதுவும் நடந்த மாதிரி இல்லை. ஆனால் இவை எல்லாம் எங்களை பொறுத்த அளவில் இந்த நாட்டில் சிங்கள பெரும்பான்மையினருடன் எதுவும் செய்ய முடியாது. இதை துல்லியமாக கணித்தவர் வேலுப்பிள்ளை அவர்களின் மகன். ஆனால் இன்று மீண்டும் இந்த நிலைமைக்கு கொண்டு வர எத்தனிக்கின்றார்கள்.

அவர்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் மீண்டும் இந்த நிலையை தோற்றுவிக்காது என ஜனாதிபதி உத்தரவாதம் கொடுக்க முடியாது. எதுவும் நடக்கலாம். ஜனாதிபதியால் கூட ஒரு முடிவும் எடுக்க முடியாமல் திணறுகின்றார்.

இங்கு தமிழனுக்கு எது நடந்தாலும் சர்வதேச சமூகமும் கேட்கின்றார்கள் இல்லை. அண்மை நாடான இந்தியாவும் கேட்கின்றது இல்லை. இலங்கை அரசாங்கமும் அதை செயற்படுத்த தயாராக இல்லை. இது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக ஓடி கொண்டு இருக்கின்றது. இவர்களுடைய ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்பதை தவிர வேறு வழி எங்களுக்கு இல்லை" என்றார்.

## பிரசவித்த சிசு கைநழுவி கீழே விழுந்து மரணம்

விழுந்த சிசு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அச்சிசுவை காப்பாற்ற முடியவில்லை.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கல்லஞ்சிய என்ற கிராமத்தைச் சேர்ந்த தாய், தனது குழந்தை பிரசவத்துக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பிரசவ நேரத்தில், அங்கிருந்த ஊழியர்களால் குழந்தையைப் பிடிக்க முடியவில்லை. அச்சிசு கைநழுவி தரையில் விழுந்துவிட்டதாக, தன்னுடைய மனைவி தன்னிடம் தெரிவித்தார் என்று அக்குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார்.

சிசு கீழே வீழ்ந்துள்ளமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளுக்காக வைத்தியசாலை பிரேத அறையில் சிசுவின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

## தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு வருவேன்

புலம்பெயர் தமிழர்களுக்கு இங்குள்ள சொத்துகளை விற்கவோ, குத்தகைக்கு வழங்கவோ கூடாது என்று ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுப்பதாகவும், அவ்வாறு வழங்க முயன்றால் களனி மக்களோடு வந்து விரட்ட நேரிடும் என்றும் எச்சரித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட வேண்டுமானால், ராஜபக்‌ஷர்களுடன் தொடர்புடைய திருடர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் எனவும் இந்த நாட்டிலுள்ள திருடர்களையும் தரகுப் பணம் பெறுபவர்களையும் வெளியேற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள மக்கள் குடிநீர் பிரச்சினையில் அல்லலுறும் போது, நுவரெலியாவில் மஹிந்த கிரிக்கெட் விளையாடுவதாகவும் இது விளையாடும் நேரமா என்றும் கேள்வியெழுப்பினார்.

## மேர்வினின் கருத்தை நியாயப்படுத்த முடியாது

திரும்பி வரமாட்டேன், உங்களின் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) தலைகளை கையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன்" இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா காணப்படுகின்றார். ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியமை, முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்து நிறுத்தியமை என அவரின் அடாவடி செயற்பாடுகளை பட்டியலிடலாம்.

ராஜபக்‌ஷர்களின் விசுவாசியாக அவர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மேர்வின் சில்வா, 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்‌ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத்தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்கவில்லை. இதனால் அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டார்.

பின்னர் தனது மகனுடன் இணைந்து மக்கள் சேவை எனும் கட்சியையும் ஆரம்பித்தார். ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தார். பொதுத்தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் களமிறங்கினார். அதன்பின்னர் சுதந்திரக்கட்சி பக்கம் தாவினார். தற்போது எந்த கட்சி என தெளிவில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீ வைத்தால் நட்டஈடு இல்லை

கடும் வரட்சியால் சேதமடைந்த பயிர்களுக்கு சிலர் தீ வைத்து போராட்டம் நடத்தியது கடந்த சில நாள்களாக ஊடகங்களில் ஒளிபரப்பான நிலையில், பயிர்களுக்கு தீ வைப்பது சட்டவிரோதமானது என்று சபை தெரிவித்துள்ளது. வரட்சியால் சேதமடைந்த வயல்களில் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாகவும் பயிர்களுக்கு தீ வைக்கப்பட்டதன் பின்னர் சேதத்தை மதிப்பிட முடியாத நிலை காணப்படுவதாகவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

நெற்பயிர்க்கு தீ வைத்தால் அவருக்கு அரசாங்கம் வழங்கிய உர மானியம் உட்பட நிவாரணத்துக்காக செலவிடப்படும் பணம் வீணாகிவிடும் என்பதால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயவும் விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

## கற்கோவளத்தை...

கற்கோவளம் இராணுவ முகாம் அப்பகுதியில் அமைந்திருப்பதனால் தமக்கு பாதுகாப்பாக உள்ளது. அத்துடன், சட்டவிரோத செயற்பாடுகளை இராணுவம் தடுத்து வருகிறது என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## வாகன கொள்வனவு...

தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை அதன்படி, தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை அடுத்த ஆண்டும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## குருந்தூர் மலையில் பொங்க அழைப்பு

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதால் அங்கு பாரிய முரண்பாட்டினை தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொங்கல் பொங்கி வழிபடலாம் என்று நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில், எதிர்வரும் 18 ஆம் திகதி பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்ள தமிழ் மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில், தமிழர்கள், குருந்தூர் விகாரையை சேதப்படுத்த உள்ளார்கள் என்றும் அதனை காப்பாற்ற அனைத்து பௌத்தர்களும் அணிதிரள வேண்டும் என்றும் குருந்தூர் மலை விகாரையின் விகாராதிபதி, சமூகவலைத்தளங்களில் பெரும்பான்மை மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். குருந்தூர்மலை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த 8ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற போது, சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபட தடை செய்யவில்லை என்றும் எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம் என தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.இந்த நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்ள மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், குருந்தூர்மலையில் தமிழர்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்வதை தடுத்து நிறுத்துமாறு ஆழும் தரப்பின் எம்.பியான சரத்வீரசேகர பாராளுமன்றில் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதேவேளை 18,19,20 ஆம் திகதிகளில் பௌத்த வழிபாடு ஒன்றினை குருந்தூர்மலையில் மேற்கொள்ளவுள்ளதாகவும் இதற்காக பௌத்தமக்கள் அனைவரும் அணிதிரண்டு வருவதுடன் ஆதரவினையும் வழங்கவேண்டும் என்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மேர்வின் சில்வா மனநோயாளியா?

தொடர்பில் அவர் பேசியது அடிப்படை மனித உரிமை மீறல் மாத்திரமல்ல, சட்டத்தை தன்னுடைய கையில் எடுத்துள்ளார்.

அதாவது வடக்கு, கிழக்கில் தமிழர்கள், விகாரைகளில் கை வைத்தால் அவர்களது தலையை களனிக்கு கொண்டு வருவேன் என ஊளையிட்டுள்ளார்.

இதற்கு முன்னைய காலத்தில் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரை திருமணம் செய்வதாக வாய்கிழிய கத்தினர். அதன் பின்னர் முன்னேஸ்வரம் ஆலய வேள்வியை தடுப்பதாக பிதட்டினார்; இறுதியில் மன்னிப்பு கேட்டார். தற்போது தமிழரின் தலையை எடுக்கிறாராம்.

உண்மையான சட்டவாட்சி நடைபெறுவதை ஜனாதிபதி உறுதி செய்ய வேண்டுமாக இருந்தால் உடனடியாக சட்ட நடவடிக்கையை எடுத்து மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும் எனக் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தூதுவர் முன்னால் மயங்கி விழுந்த மாணவி

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், இலக்கம் 02 அ.த.க பாடசாலைக்கு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுசி கிடாக்கியை வரவேற்கும் நிகழ்வில் பங்குபற்றியிருந்த பாண்ட் அணி மாணவி, தூதுவருக்கு முன்னால் மயங்கி விழுந்த சம்பவம் நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

ஜப்பானிய மக்களின் நன்கொடையாக வழங்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தை, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கும் நிகழ்வுக்காக வருகை தந்த ஜப்பானிய தூதுவர் மிசுசி கிடாக்கியை, பாண்ட் இசையுடன் அழைத்துவருகின்ற போதே மாணவி மயங்கி விழுந்துள்ளார்.

காலை உணவு உட்கொள்ளாது, நீண்ட நேரம் கடும் வெயிலில் நின்றிருந்த மாணவி, பாண்ட் இசையுடன் ஜப்பானிய தூதுவரை அழைத்துவருகின்ற போதே அவர் முன்னால் மயங்கி விழுந்துள்ளார். மயங்கி விழுந்த மாணவியை உடனடியாக ஆசிரியர்கள் தூக்கிச் சென்று முதலுதவி அளித்தனர்.



ஓட்டுமாவடி விபத்தில்

## இளம் பெண் மரணம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

ஓட்டமாவடி பி.எஸ் வீதியில், நேற்று முன்தினம் இரவு (13) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார்.

தனது சகோதரருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, கல்லில் மோட்டார் சைக்கிள் சறுக்கியதில், பின்னால் இருந்த பெண் கீழே விழுந்துள்ளார். தலைப் பகுதியில் கடும் பாதிப்படைந்த அவர், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்த பெண், மீராவோடை உதுமான் வித்தியாலயத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரியும் 28 வயதுடைய ஜே. ராஷிதா பர்வின் ஆவார்.

## நாட்டார் பாடலில் முதலாமிடம்




மாத்தளை, நாவுல கல்வி வலயத்தில் சனிக்கிழமை (12) ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை வலய மட்ட தமிழ் மொழித்தின போட்டியில் கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம் திறந்த போட்டிப் பிரிவு நாட்டார் பாடலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களான பிரதிக்ஷன், கிஷானி, பபிலாஷினி, விஜேன்தனி, ராஜேஸ்வரி, ரம்யா பகீர்தனி போன்றோர் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர்.

கம்மடுவை மக்களின் வாழ்வியலை மையமாக கொண்டு காணப்பட்ட இந்த நாட்டார் பாடலை, பாடசாலையின் தமிழ்த் துறைக்குப் பொறுப்பான ஆசிரியர் ஜயகுமார் ஷான் பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி

## கோடி ரூபாய் மோசடி; போலி முகவர் கைது

■ கனகராசா சரவணன்

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, ஒரு கோடி ரூபாய் பணமோசடி செய்த அமிர்தகழி பிரதேசத்திலுள்ள போலி முகவரின் வீட்டை முற்றுகையிட்ட வேலைவாய்ப்பு பணியக அலுவலர்கள், போலி முகவரைக் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு, அமிர்தகழி பிரதேசத்தைச் சேர்ந்த போலி முகவர், வெளிநாட்டு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, ஒருவரிடம் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 22 பேரிடம் ஒரு கோடி ரூபாய் வாங்கிய நிலையில், அவர் வெளிநாட்டுக்கு அனுப்பாது ஏமாற்றி வந்தார். இந்நிலையில், போலி முகவருக்கு எதிராக இருவர் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள், மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரின் உதவியுடன், போலி முகவரின் வீட்டை முற்றுகையிட்டு, அவரைக் கைது செய்தனர்.





## செஞ்சோலையில் நினைவேந்தல்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தில், 2006.08.14 அன்று விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் நான்கு பேரின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, இடைக்கட்டு சந்தியில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தாய் தமிழ் பேரவையின் ஆதரவோடு சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில், அரசியல் பிரமுகர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள், செஞ்சோலையில் உயிரிழந்த பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 'யோகியர் சிகிச்சை இரகசியம்' நூல் வெளியீடு



■ எஸ். நிதர்ஷன்

ஸ்ரீநந்தகுமார் எழுதிய 'யோகியர் சிகிச்சை இரகசியம்' என்ற நூல் வெளியீட்டு விழா, யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சொஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் கலந்து கொண்டிருந்தார். இதன் போது நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் ஸ்ரீநந்தகுமார் வெளியிட்டு வைக்க கலாநிதி ஆறுதிருமுருகன் முதற்பிரதியை பெற்றுக் கொண்டார்.

## பாடசாலையில் திருட்டு இராணுவ வீரர் கைது

■ ராமு தனா

ஹல்துமுல்ல, சொரகுனே பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிற்குள் புகுந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிய குற்றச்சாட்டில் இராணுவ வீரர் ஒருவர், திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டதாக ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் பாடசாலையின் பழைய மாணவர் எனவும் சந்தேக நபர் புனானி இராணுவ முகாமில் பணிபுரியும் பொறியியலாளர் படைப்பிரிவின் சிப்பாய் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையின் சங்கீத அறையை உடைத்து மல்டிமீடியா இயந்திரம், புளூடூத் உபகரணங்கள் மற்றும் சீடி பிளேயர் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கு அமைய சந்தேகத்திற்கிடமான இந்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திருடப்பட்ட மல்டிமீடியா இயந்திரத்தை 25,000 ரூபாய்க்கு தியத்தலாவ பிரதேசத்தில் விற்று, சந்தேக நபர் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் சிடி ப்ளேயரை நண்பருக்கு வழங்கியதாகவும், புளூடூத் ஸ்பீக்கர் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் கலுபானவின் ஆலோசனையின் பேரில், ஹல்துமுல்ல பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் அசங்க சுரவீர உள்ளிட்ட குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

## மடு திருத்தல பக்தர்களுக்கு அவசர கோரிக்கை

■ எஸ். றொசேரியன் லெம்பேட்



மன்னார், மடு மாதா திருத்தலச் சூழலில், பெருமளவில் பக்தர்கள் தங்கியுள்ள நிலையில், இடையிடையே மழை பெய்து வருகிறது. இதனால் தமது வாழ்விடங்களில் வசிக்க முடியாத விஷ ஜந்துகள் அங்கிருந்து வெளியேறி வருவதால், அவற்றால் பக்தர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே, திருத்தல சூழலில் தங்கியுள்ள பக்தர்கள், இது தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் அவசர கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், அடையாளம் காணப்பட்ட விஷ ஜந்துகளால் கடியுண்டவர்கள், உடனடியாக தேவாலயத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படு-கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மருத மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா, இன்று (15) செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிலையில், இலட்சக்கணக்கான மக்கள் மடு திருத்தலத்துக்கு வருகை தந்து, தற்காலிக கூடாரங்களை அமைத்து தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாலியல் துன்புறுத்தல்:

## ஆசிரியர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கவும்

**மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கண்டிப்பான உத்தரவு**

■ பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தில் பாடசாலைப் பிள்ளைகளுடன் முறைகேடாக நடந்த ஆசிரியர்களுக்கு எதிராக, நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுவதை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிரஞ்சன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் சனிக்கிழமை (12) நடத்திய நீண்ட கலந்துரையாடலிலேயே மேற்படி விடயத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாணவர்கள் காயமடையும் அளவுக்கு பாடசாலைகளில் தண்டிக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக, உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தி உள்ளார்.

## தொடர் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

■ எஸ். தில்லைநாதன்

நீடித்த காய்ச்சலால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சனிக்கிழமை (12) உயிரிழந்தார்.

கோண்டாவில் மேற்கை சேர்ந்த 42 வயதுடைய நாராயணசாமி கோவர்த்தனன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

கடந்த ஐந்து நாள்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கல்வியங்காட்டில் குடும்பஸ்தர்

## மர்ம மரணம்; அறுவர் கைது

■ பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு ஜி.பி. எஸ் விளையாட்டு அரங்கு பகுதியில் சனிக்கிழமை (12) ஆணின் சடலம் நிர்வாணமாக மீட்கப்பட்ட நிலையில், அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையில் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கோப்பாய், சிந்தன்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர், கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது வயது சிறுமியை பாடசாலைக்கு ஏற்றி இறக்கி வரும் நிலையில், குறித்த நபர் சிறுமியுடன் தவறாக நடந்ததாக சிறுமி தனது தாயாருக்கு தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில், தாயார் சித்தன்கேணியில் உள்ள சிறுமியின் மாமனுக்கு சிறுமியை துன்புறுத்தியமை தொடர்பில் தெரிவித்த நிலையில், அவர் கோப்பாய் வந்து, குறித்த நபரை சிந்தன்கேணிக்கு அழைத்துச் சென்று, அங்கு வைத்து விசாரித்த போது, அந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர், அந்த நபரை கோப்பாய் கொண்டுசென்று, அவரது இல்லத்தில் விட்டுள்ளனர். அவ்வாறு வீட்டில் விடப்பட்ட நிலையில், அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்ட பொழுதும் உயிர் பிரியக் கூடிய வகையில் காயங்கள் பாரதூரமானதாக இல்லை எனவும் குறித்த நபர் ஏற்கெனவே இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், மாரடைப்பால் உயிரிழந்து இருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## மனைவியை வீடுக்குள் பூட்டிவிட்டு தீ வைப்பு

மனைவியை வீட்டுக்குள் பூட்டிவிட்டு, வீட்டுக்கு தீ வைத்த நபர் கைது செய்யப்பட்டதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, கமகொட, ரஜவத்த பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கும் இடையில் சில காலமாக குடும்பத் தகராறு இருந்து வந்ததாகவும், சந்தேகநபர் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை மது போதையில் வந்து ரப்பர் மெத்தை, தலையணைகள் மற்றும் துணிகளுக்கு தீமூட்டியதாகவும் அப்போது மனைவி வீட்டில் இருந்தமை இதுவரையிலான விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயால் வீட்டின் சமையலறை முழுவதும் சேதமடைந்துள்ளது.

# இரத்தத்தை சூடாக்கும் வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்க்கவும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, சர்ச்சையான கருத்துகளைத் தெரிவித்தும், அதிரடியான நடவடிக்கையில் ஈடுபட்டும் சிக்கிக்கொள்ளும் ஒரு நபராகவே இன்னும் இருக்கின்றார்.

அரசியலில் இருந்து தூக்கிவீசப்பட்ட ஒரு நபர், ராஜபக்ஷ அணிக்காக தீவிரமாக பிரசாரம் செய்த நபர்களில் ஒருவராக இருந்தவர், பிற்காலத்தில் ராஜபக்ஷ குடும்பத்தையே கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

இந்நிலையில், தன்னுடைய இருப்புக்காக, தற்போது இனவாத கருத்துகளை விதைக்கின்றார். சிங்கள-பௌத்த குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தலா ஐந்து குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி இருந்தார்.

சிரமதானத்துக்கு வருகைதராமையால், களனி பிரதேசத்தில் கிராமசேவகர் ஒருவரை மரத்தில் கட்டிவைத்து அவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தார். இதற்கு எதிரான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு, கிராம சேவகர்களால் எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு சர்சைக்குள் சிக்கிக்கொள்ளும் அவர், "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரை, காலி முகத்திடலுக்கு கொண்டுவந்து தலையில் சுடுவேன்" என, தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் கருத்தை தெரிவித்திருந்தார்.

இவ்வாறாக இனவாதக் கருத்துகளைத் தெரிவித்து சிங்கள - பௌத்த மக்களை 'உசுப்பேற்றி' வந்தவர் இப்போது, "விகாரைகள் மீது கை வைத்தால் அல்லது பௌத்த மதகுருக்கள் மீது கைவைக்க முயன்றால், நான் வடக்குக்குச் சென்று, அவர்களின் தலைகளை களனிக்கு கொண்டுவருவேன்" என எச்சரித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படவேண்டிய ஒரு சூழலில், இவ்வாறு இனவாதத்தை தூண்டும் வகையிலான கருத்துகளைத் தெரிவித்து, இரத்தத்தை சூடாக்கும் வார்த்தை பிரயோகங்கள் கைவிடப்படவேண்டியவையாகும்.

அரசியல் இருப்பு, அரசியல் மீள் பிரவேசத்துக்காக, இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தும், குரோதங்களை விதைக்கும் கருத்துகளைத் தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும்.

கடந்த காலங்களில் எடுத்துரைத்ததைப் போல, தமிழர்களின் பூர்வீக இடங்களில் பௌத்த சிலைகளைக் கொண்டுவந்து வைத்துவிட்டு, அங்கிருந்த இந்துமத சின்னங்களை அப்புறப்படுத்திவிட்டு, தொல்பொருள் ஆராய்ச்சி எனும் திரைமறைவில், விகாரைகளை நிர்மாணிப்பது, எந்தவகையிலும் நியாயமானதாக அமையாது.

கட்டிமுடிக்கப்பட்ட விகாரைகளை யாருமே உடைக்கமாட்டார்கள். எனினும், அவ்வாறான விடயங்கள் நீதிமன்றங்களில் உள்ளன. என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தன்னுடைய வரப்பிரசாதங்களை பயன்படுத்தி, வடக்கில் இருக்கும் இனவாத நீதவான்கள், நீதிபதிகளின் தீர்ப்பை தான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என கருத்துரைத்து வருகின்றார். இன்றேல், ஸ்தலத்துக்கு சென்று விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்கின்றார்.

நாடு, பெரும் அதாள பாதாளத்துக்குள் விழுந்து கிடக்கிறது. மீண்டுமொரு முரண்பாடுகள் ஏற்பட்டால் அதனை தாங்கிக்கொள்ளும் சக்தி நாட்டுக்கு இல்லை. எனவே, நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பினால், இரத்தத்தை சூடாக்கும் வார்த்தை பிரயோகங்களைத் தவிர்ப்பதே ஒரே வழியாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானது என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனததை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பஸ் சேவையை நடத்துங்கள்

முல்லைத்தீவு - கொக்காவில் வரை பஸ் சேவைகளை நடத்துமாறு இப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது திருமுறிகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் கொக்காவில் பகுதியில் 60 வரையான குடும்பங்கள் தற்போது புதிதாக குடியமர்ந்துள்ளன.

கொக்காவில் பகுதியில் ஏ-9 வழியாக பயணிக்கின்ற பஸ்கள் பொது மக்களை ஏற்றுவதில்லை. இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செ.பிறேமகாந், தற்போது திருமுறிகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் நடைபெறுகின்ற குறுந்தூர பஸ் சேவைகளை கொக்காவில் வரை நீடிப்பதன் மூலம் 60 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நன்மையடையும் என்றும் இதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேணடும் எனவும் தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ்கள், குறிப்பாக ஏ-9 சாலையில் மக்களையும் மாணவர்களையும் ஏற்றிச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வருகின்றமை, கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

நடராசா கிருஸ்ணகுமார்

## முஸ்லிம் அரசியல்:

# தேவை ஓர் 'அழுத்தக்குழு'

மொஹமட் பாதுஷா

ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, அரசியல் கட்சிகளும் மக்கள் பிரதிநிதிகளும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு தேசத்தில், மக்கள் பக்கமிருந்து இயங்கும் அழுத்தக் குழுவொன்றின் பங்களிப்புகள், அசாதாரணமான அடைவுகளை பெற்றுக் கொடுக்கும் வினையூக்கிகளாக இருந்திருக்கின்றன.

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாக மக்கள் பிரதிநிதிகள் இருந்தாலும், மக்கள் ஆணையைப் பெற்றவர்களாக அரசாங்கம் காணப்பட்டாலும் தேர்தலுக்குப் பின்னர் அவர்களது போக்கு, திசை மாறுவதை நெடுகிலும் கண்டு வருகின்றோம்.

அந்தத் தருணத்தில், ஆட்சியாளர்களும் சரி, பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, நலன்களின் மோதலுக்கு ஆளாகின்றனர். அதாவது, சமூக நலனா, சொந்த அரசியல் நலனா என்ற என்ற தெரிவை, அவர்கள் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இலங்கை போன்ற நாடுகளில், பெரும்பாலும் ஆட்சியாளர்களுக்கும் பெரும்பான்மை - சிறுபான்மை அரசியல் பிரதிநிதிகளுக்கும், மக்கள் சார்பு அரசியல் என்பது முதன்மைத் தெரிவாக இல்லை என்பதற்கு, நாமே வாழும் சாட்சிகள். அதன் தாக்கத்தை நாம் பலதடவை அனுபவித்துள்ளோம்.

மிகக் குறிப்பாக, முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியான இழப்புகளைச் சந்தித்து வருவதற்கு, இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். முறையாக கட்டமைக்கப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, நெறிமுறை சார்ந்த, பண்பாடுள்ள, மிதவாத போக்குடைய, அறிவார்ந்தமான ஓர் அழுத்தக்குழுவின் வெற்றிடம், முஸ்லிம் அரசியலில் நெடுநாளாகவே உணரப்பட்டு வருகின்றது.

இங்கே, 'அழுத்தக்குழு' என்பதைத் தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது. மிகக் கவனமாகவும் சரியாகவும் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூக நலனை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு, சமூக மட்டங்களில் இருந்தும் அழுத்தங்களை பிரயோகிக்கின்ற ஒரு சிவில் சமூக குழுவாக இது இருக்க வேண்டும்.

அரசியல் விஞ்ஞானம் படித்த மேதைகளாக அவர்கள் இருப்பதை விட, அரசியல் களநிலைமைகள் மற்றும் நடைமுறை யதார்த்தம் தெரிந்தவர்களாக இருப்பதே முக்கியமானது. ஒழுக்கமுள்ளவர்களாக, இங்கிதமும் நாகரிகமும் தெரிந்தவர்களாக பக்குவப்பட்ட ஒரு குழுவாக அது இருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் அபிலாஷைகள், உரிமைகள், அதன்பொருட்டு எடுக்கப்பட வேண்டிய நகர்வுகள் என்ன என்பதை, தொடர்ச்சியாக இக்குழு அவதானித்து வருவதுடன், அவற்றைச் செய்வதற்கான அழுத்தத்தை, அரசியல்வாதிகள் மீது வெளியில் இருந்து பிரயோகிக்க வேண்டும்.

அந்தக் குழு, சமூகத்துக்காக அதைச் செய்ய வேண்டுமே தவிர, அதற்கு மறைமுக நிகழ்ச்சி நிரலோ உள்நோக்கமோ இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், நாம் சொல்கின்ற அழுத்தக்குழு அதுவல்ல!

> **இலங்கை அரசியலில் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியியலாளர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. ஆயினும் கூட, முஸ்லிம் அரசியலை நெறிப்படுத்தும் விடயத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகமோ, முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கின்ற புத்திஜீவிகள், காத்திரமான அழுத்தங்களை, வழிப்படுத்தலை வழங்குவதில்லை**

இலங்கை ஒரு பல்லின நாடு என்ற அடிப்படையை, எப்போதும் மறந்து விடக்கூடாது. ஆகவே, அரசியல் மீது அழுத்தம் செலுத்துகின்ற எந்தக் குழுவும் கடும்போக்கு, தீவிரபோக்கை பின்பற்ற முடியாது. முஸ்லிம்களுக்காக முன்னிற்றல் என்ற தோரணையில், இனவாதமாக, மதவாதமாக அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வால்பிடித்துக் கொண்டு நிற்பது பொருத்தமற்றது.

முஸ்லிம் அரசியல்வாதிகள், தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. தேர்தல் காலத்தில் அவர்களுக்கு ஞானம் பிறப்பதும், தேர்தல் முடிவு வெளியான பிறகு அவர்கள் 'ஞானசூனியங்கள்' ஆகிவிடுவதும் நமக்குப் புதியதல்லவே! கால் நூற்றாண்டாக அதன் பிரதிபலனை முஸ்லிம்கள் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

சரியான அழுத்தக் குழு என்பது, கலவரக் காரர்களோ, குழப்பவாதிகளோ, மறைமுக நிகழ்ச்சி நிரல்களை வைத்துக் கொண்டு சமூகம் பற்றிப் பேசுபவர்களோ அல்லர். அடுத்த முறை அரசியலில் குதிப்பதற்காக, ஒரு குறிப்பிட்ட அரசியல் அணியை வீழ்த்த காய் நகர்த்துபர்களும் அல்லர்.

சமூக நலன் கருதிய அரசியலை, மக்கள் பிரதிநிதிகள் முன்னெடுக்கின்றார்களா என்பதை தொடர்ச்சியாக அவதானித்து வருவதுடன், அந்த வழித்தடத்தில் இருந்து அரசியல்வாதிகள் விலகிச் செல்கின்ற போது, அதற்காகக் குரல் கொடுக்கும், வெளியில் இருந்து அவர்களை வழிப்படுத்தும் தரப்பினரையே இது குறிப்பிடுகின்றது.

சிங்கள அரசியலில் அழுத்தக் குழுக்கள் நிறையவே இருக்கின்றன. சில குழுக்களின் பின்னணியில் வேறு செயற்றிட்டங்கள் இருந்தாலும் கூட, பொதுவில் பெரும்பான்மை சமூகத்துக்குப் பாதகமான தீர்மானங்கள் வருகின்ற போது, அவற்றை எதிர்ப்பதற்கும் சிங்கள மக்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் எந்த எல்லை வரையும் செல்லத் தயாரான பல குழுக்கள் உள்ளன.

அதேபோன்று, தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க அழுத்தக் குழுக்களை காணலாம். உண்மையாகச் சொன்னால், அழுத்தக் குழுக்களின் காரணமாகவே, தமிழர் அரசியல் என்பது ஓரளவுக்கேனும் சமூகம் சார்ந்ததாக தன்னை தகவமைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான குழுக்களின் பிடி தளர்கின்றபோது, தமிழர் அரசியல் தளம்புவதையும் காண முடிகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சமூகங்கள், பல்கலைக்கழக கல்வியியலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், சமூக அமைப்புகள், சுய இலாபத்துக்காக அல்லாமல் சமூகத்துக்காக மட்டும் குரல்கொடுக்கிள்ற சில புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் ஆகியோரை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஆனால், இப்படியோர் ஏற்பாடு முஸ்லிம் சமூகத்துக்குள் இல்லை. எனவே, முஸ்லிம் தலைவர்கள், பாராளமன்ற உறுப்பினர்களின் அரசியல், தறிகெட்டு ஓடிக் கொண்டிருப்பதற்கு நாம் அனைவரும்தான் சாட்சிகளாக உள்ளோம். சமூக வலைத்தளங்களில், முட்டாள்தனமாக கருத்து வெளியிடுவது, காத்திரமான அழுத்தமாக அமையாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள், ஒரு கட்சியில்த்தான் போட்டியிட வேண்டும் என்று கூற முடியாது. அது கற்பனைக்கும் அப்பாற்பட்டது. ஆனால், சமூகத்துக்கு ஒரு பிரச்சினை என்று வருகின்ற போது, பகை மறந்து அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஓர் இடத்தில் சந்தித்து, சமூகம் குறித்த முடிவுகளை எடுப்பதுதான் அவசியமாகும்.

ஆனால், வாக்களிக்கின்ற முஸ்லிம் மக்கள், ஒருபோதும் அரசியல்வாதிகளை தட்டிக்கேட்பதில்லை. மாறாக, 'எங்கள் தலைவர் எதையாவது செய்தால், எங்களது எம்.பி முடிவு எடுத்தால், அது சரியாக இருக்கும்' என்று முட்டாள்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். அதனால், மக்களின் பக்கத்தில் இருந்து எந்த அழுத்தமும் பிரயோகிக்கப்படுவதில்லை.

ஊர் வாரியாக இருக்கின்ற பள்ளிவாசல்களிலும் பாடசாலைகளிலும் அரசியல் இப்போது புகுந்து விளையாடுகின்றது. ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் சமூக நலனுக்கான நகர்வுகளை எடுப்பதற்கான அழுத்தத்தை பள்ளிவாசல்களோ, உலமா சபை போன்ற சமூக அமைப்புகளோ கொடுக்கவில்லை.

இலங்கை அரசியலில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்வியியலாளர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. ஆயினும் கூட, முஸ்லிம் அரசியலை நெறிப்படுத்தும் விடயத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகமோ, முஸ்லிம் சமூகத்துக்குள் இருக்கின்ற புத்திஜீவிகள், படித்தவர்களோ காத்திரமான அழுத்தங்களை, வழிப்படுத்தலை வழங்குவதில்லை.

ஒவ்வொரு கட்சியின் முகாமுக்குள்ளே நின்று கொண்டு, சமூக நலன் பற்றிப் பேசுகின்றவர்களே அதிகமுள்ளனர். அதைவிடுத்து, சமூகம் என்ற பொதுவெளியில் நின்று கொண்டு, சரியை சரி என்றும் பிழையை பிழை என்றும் சொல்லி, வேறு எந்த உள்நோக்கமும் இல்லாமல், முஸ்லிம் அரசியலை வழிப்படுத்த ஓர் ஏற்பாடு அவசியம்.

இப்படிப்பட்டவர்கள் எல்லோரும் ஒரு குழுவாக இயங்க வேண்டும் என்பதில்லை. ஆனால், முஸ்லிம் அரசியலை உன்னிப்பாக உற்றுநோக்கி வருவது மட்டுமன்றி, தேவையான போது நெறிப்படுத்தும் பணியை எங்கிருந்தாவது செய்து கொண்டிருக்க வேண்டும். முதலில் அவர்களுக்குத் தெளிவான சிந்தனை இருக்க வேண்டும்.

அப்படியான ஒரு குழு, ஓர் ஏற்பாடு முஸ்லிம் அரசியலில் இல்லாத காரணத்தால், முஸ்லிம் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது விருப்பப்படி போய்க் கொண்டிருக்கின்றார்கள். முட்டாள்தனமான நகர்வுளை நியாயப்படுத்த கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதன் இழப்புகளை சமூகம் அனுபவித்துக் கொண்டே இருக்கின்றது.

இப்போதும் அழுத்தக் குழுவொன்றின் தேவை கடுமையாக உணரப்படுகின்றது. அதைக்கூட உணராத ஒரு கூட்டமும் உள்ளது. ஆனால், சமூக நோக்கம் கருதிய அழுத்தக் குழவை உருவாக்குவது, முஸ்லிம் சமூகத்துக்குள் இலேசுபட்ட விடயமும் அல்ல!



# இளம்பருவ மாணவர்களும் பாலீர்ப்பு, பால்நிலை அடையாளம்/ பால்நிலை வெளிப்பாடு அடிப்படையிலான பாகுபாடுகள்



**மதுரி தமிழ்மாறன்,**
தேசிய சட்ட ஆலோசகர்– இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு

இராஜாங்க அமைச்சர் ஒருவரின் அண்மைய கருத்தானது, இலங்கை பாடசாலைகளின் பாடத்திட்டத்திற்குள் விரிவானதொரு பாலியல் கல்வியை உள்ளடக்குவதன் அவசியத்தை மீண்டும் ஒருமுறை முன்னிலைப்படுத்தியுள்ளது. 2010 இல், கல்வி உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் (UN) அப்போதைய சிறப்பு அறிக்கையாளர், தனது பொதுச் சபைக்கான அறிக்கையில், 'பாலியல் கல்வியானது பன்முகத்தன்மைக்கான சிறப்பு கவனத்தை செலுத்த வேண்டும். ஏனெனில் பாலீர்ப்பு அல்லது பால்நிலை அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமல் ஒவ்வொருவருக்கும் அவரவர் பாலுணர்வைக் கையாள உரிமை உண்டு. பாலியல் கல்வியானது பலதரப்பட்ட பாலீர்ப்புகளைக் கொண்டவர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அடிப்படைக் கருவியாகும்' என அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். உண்மையில், இலங்கையில் உள்ள தன்பாலீர்ப்பு பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர் மற்றும் திருநர் (LGBT) மாணவர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள் அடிப்படையில் அனைத்து மாணவர்களுக்குமான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கு விரிவான பாலினக் கல்வியானது, பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்பாடு (SOGIE) பற்றிய கற்றலையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பது அவசியமாகும்.

உலகெங்கிலும் உள்ள LGBT மாணவர்கள் தங்களுடைய இளம்பருவ வயதில் பள்ளியில் வழக்கமாகவே பாகுபாடு, கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல், வன்முறை மற்றும் பிற வகையான துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டுவருகின்றனர். இலங்கையில் உள்ள பெரும்பான்மையான LGBT நபர்கள், தங்களைவிட இளைய மற்றும் மூத்த மாணவர்களினூடாக தாங்கள் அனுபவித்த பாலியல் வன்முறை சம்பவங்கள் உட்பட பல துஷ்பிரயோகங்களை மறக்காமல் நன்கு நினைவில் வைத்து பேசுகின்றனர். LGBT மாணவர்களுக்கு எதிரான இத்தகைய கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றின் பரவுகையானது அத்தகைய செயல்களை விரைவாக அடையாளம் காணவும் தடுக்கவும் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களினுடைய அதிகாரிகளின் தரப்பிலிருந்து உடனடி நடவடிக்கையை அவசியப்படுத்துகிறது. ஆனால் அதற்கு மாறாக, அத்தகைய கல்வி நிறுவனங்களில் பொதுவாக நடப்பது யாதெனில், ஏற்கெனவே ஆபத்தில் உள்ள LGBT மாணவர்களை மேலும் துன்புறுத்தமளவிற்கு ஏனைய மாணவர்கள் தூண்டப்படுகிறார்கள்.

கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் போன்ற செயல்கள் பெரும்பாலும், பால்நிலை பாத்திரங்கள் மற்றும் பால்நிலை வெளிப்பாடு சம்பந்தமான கலாசார நம்பிக்கைகளில் வேரூன்றியிருக்கும் தீங்கு விளைவிக்கும் பால்நிலை பற்றிய ஒரே மாதிரியான பழைய எண்ணங்கள், களங்கம் மற்றும் பாரபட்சம் ஆகியவற்றால் இயக்கப்படுகின்றன. இதன் விளைவாக, LGBT மாணவர்கள் அடிக்கடி கேலி, கிண்டல், வதந்திகள், சமூக தனிமைப்படுத்தல், உடல் மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற பல்வேறு வகையான துஷ்பிரயோகங்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய துஷ்பிரயோகங்கள் LGBT மாணவர்களின் உடல் மற்றும் உள ஆரோக்கியம் உட்பட, நம்பிக்கையிழப்பு, பதற்றம், குற்ற உணர்வு, மனச்சோர்வு, பின்வாங்கல், சுய தீங்கு மற்றும் இறுதியில் தற்கொலை வரை இட்டுச்செல்லும் மிக ஆழமான பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவற்றின் காரணமாக, LGBT மாணவர்கள் பள்ளியில் தம்மை பாதுகாப்பற்றவர்களாக உணரக்கூடிய நிலை உருவாகிறது. இதனால் தமது வகுப்புகளைத் தவறவிடக்கூடும் அல்லது பள்ளியில் தனிமையை உணரக்கூடும். இதனால் அவர்களின் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் பாதிக்கப்படலாம். இவை அவர்களின் சமூக மற்றும் பொருளாதார விடயங்களில் மட்டுமின்றி மேலும் பல பாதகங்களுக்கு வழிவகுக்கும். மேற்குறிப்பிடப்பட்டவை, இலங்கையில் LGBT மாணவர்கள் இன்றும் தங்கள் பாடசாலை வாழ்க்கையில் எதிர்கொள்ளும் உண்மையான கவலைக்கிடமான நிலைமைகளாகும்.

## சட்டம்

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் நோக்கத்துடன், 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டமானது இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 17 ஆனது, 'கல்வி நிறுவனம்' என்ற பதத்தின் விளக்கத்திற்குள் அரச பாடசாலைகளையும் உள்ளடக்கியது. இந்தச் சட்டமானது, பகிடிவதையை 'கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒருவருக்கு அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவருக்கு உடல் அல்லது உள ரீதியான ஊறு அல்லது மனநோய் அல்லது அச்சத்தை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும் செயல்' என்று வரையறுக்கிறது. அதே நேரத்தில் குற்றவியல் மிரட்டல் தொடர்பான பிரிவானது, 'பாதிக்கப்பட்டவருக்கு அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அல்லது பாதிக்கப்பட்டவரை அவர்கள் சட்டபூர்வமாக செய்யத் தேவையில்லாத விடயங்களைச் செய்யும்படி வற்புறுத்தும் நோக்கத்துடன் எந்தவொரு மாணவர் அல்லது ஊழியர்களின் நற்பெயர் அல்லது சொத்துகளுக்கு ஊறு ஏற்படுத்துதல்' போன்ற வாய்மொழி மூலமான அல்லது எழுத்துப்பூர்வமான அச்சுறுத்தல்களைத் தடுக்கிறது.

> **இலங்கையில் உள்ள LGBT மாணவர்கள், சமூகத்தில் கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றை சகித்துகொண்டு வாழ்ந்து வருகின்றனர். எனவே, அரசு தலையிட்டு அவ்வாறானோரை பாதுகாக்க வேண்டும்**

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு, அதன் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சட்டத்தின் முன் அனைத்து நபர்களுக்கும் சமமான பாதுகாப்பிற்கான உரிமையை உறுதிசெய்துள்ளது (உறுப்புரை 12). குறிப்பாக, உறுப்புரை 12(2) ஆனது தடைசெய்யப்பட்ட பாகுபாடுகளுக்கான அடிப்படைகளாக இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து மற்றும் பிறந்த இடம் போன்றவற்றை குறிப்பிடுகிறது. ஆனால், குறித்த உறுப்புரையில் பாலீர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் (SOGIE) ஓர் அடிப்படையாக குறிப்பிடவில்லை. ஆனால், இலங்கை அரசாங்கமானது பல்வேறு ஐக்கிய நாடுகளின் அங்கங்களுக்கு முன்பாக, 'உறுப்புரை 12(2) இன் கீழ் 'பாகுபாடு காண்பிக்கப்படுவதற்கான தடைசெய்யப்பட்ட அடிப்படைகள் முழுமையானவை அல்ல என்றும், குறித்த உறுப்புரையில் பாலீர்ப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டுவது மறைமுகமாக தடைசெய்யப்பட்டுள்ளது' என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களுக்கும் அவற்றின் பின்னேற்பாடுகளுக்கும் இலங்கை ஒரு தரப்பினராக கைச்சாத்திட்டதுள்ளது. எனவே, இந்த உடன்படிக்கைகளின் கீழ் பாதுகாக்கப்பட்ட சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமைகள் அனைத்து இலங்கையர்களுக்கும் பொருந்துபவனவாகும். சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்க, LGBT மாணவர்களுக்கு வன்முறை மற்றும் பாகுபாடின்றிய கல்விக்கான உரிமை முழுமையாக கிடைக்கப்பெறவேண்டும். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், கல்வியில் பாகுபாடுகளுக்கு எதிரான சமவாயம், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளுக்கெதிரான சர்வதேச சமவாயம் (CEDAW) மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் (CRC) போன்ற அனைத்து சாசனங்களும் கல்விக்கான உரிமையை உறுதி செய்து பாதுகாக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகளுக்கான குழு (CRC குழு), பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளுக்கெதிரான குழு (CEDAW குழு) மற்றும் மனித உரிமைகள் குழு உட்பட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சமவாய அமைப்புகள் பல சந்தர்ப்பங்களில் SOGIE அடிப்படையில் கல்வியில் வன்முறை மற்றும் பாகுபாடு பற்றிய தங்களது கவனத்தை முன்வைத்திருந்தன. மேலும் LGBT சிறுவர்களின் பாடசாலைகளில் அவர்களுக்கெதிரான துன்புறுத்தல், கொடுமைப்படுத்தல் மற்றும் வெளியேற்றப்படுவதைத் தடுக்கவும், தவிர்க்கவும் மற்றும் தண்டிக்கவும் பொது விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகளை செயற்படுத்துதல் உட்பட பல நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசுகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. மேலும் CEDAW குழுவானது, கொள்கை மேம்பாட்டைத் தெரிவிக்க, கல்வி தொடர்பான வேறாக்கப்பட்ட SOGIE புள்ளிவிவரத் தரவுகளை சேகரிக்கவும் அதனைக்கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் தனது கருத்தினை தெரிவித்துள்ளது.

கல்வி உள்ளடங்கலாக அனைத்து வகையான உடல் அல்லது உள வன்முறைகளிலிருந்தும் சிறுவர்களை பாதுகாக்க சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் அரசுகளை கடமைப்படுத்துகிறது, மேலும் பாகுபாடின்மை, உயிர்வாழ்தல், பிழைத்தல் மற்றும் மேம்பாடு, அத்துடன் கேட்கப்படுவதற்கான உரிமை போன்ற சிறுவர்களுடைய உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான பிணைக்கும் தரங்களை அமைக்கிறது.

CRC குழுவானது, இளம்பருவத்தினரின் உடல்நலம் மற்றும் மேம்பாடு குறித்து 2003 ஆம் ஆண்டில் பொது கருத்துரை 4 ஐ வெளியிட்டதோடு, CRC இன் கீழ் பாகுபாடின்மைக்கான உரிமையானது, 'இளம் பருவத்தினரின் பாலீர்ப்பு' தொடர்பாகவும் உத்தரவாதம் அளிக்கின்றது என்று கூறியது. 2011 ஆண்டின் அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் விடுபடுவது குறித்தான பொது கருத்துரை 13 ஆனது, 'தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், திருநர்கள் சிறுவர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் இருப்பதாகவும் அடையாளம் கண்டுள்ளது. மேலும், CRC குழு, 2016 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க பொதுக் கருத்துரையில், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், திருநர் மற்றும் இடையலிங்க இளம் பருவத்தினர் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை, களங்கம், பாகுபாடு, கொடுமைப்படுத்துதல் உள்ளிட்ட துன்புறுத்தலை எதிர்கொள்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டது. கல்வி மற்றும் பயிற்சி, அத்துடன் குடும்பம் மற்றும் சமூக ஆதரவு இல்லாமை, அல்லது பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகள் மற்றும் தகவல்களுக்கான அணுகல் மற்றும் 'அதிக சந்தர்ப்பங்களில், அவர்கள் பாலியல் வன்கொடுமை, கற்பழிப்பு மற்றும் மரணத்தை கூட எதிர்கொள்கின்றனர்' எனக்குறிப்பிட்டிருந்தது.

இந்தச் செயல்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்த CRC குழுவானது, அனைத்து இளம் பருவத்தினரின் கருத்து சுதந்திரம், அவர்களின் உடல் மற்றும் உளவியல் ஒருமைப்பாடு, பால்நிலை அடையாளம் மற்றும் வெளிப்படுத்திக் கொள்ளும் சுயாட்சிக்கான உரிமைகளை வலியுறுத்தியது. மேலும் இத்தகைய நடைமுறைகள் மற்றும் அவற்றைப் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், SOGIE ஐ அடிப்படையாகக் கொண்ட குற்றவியல் அல்லது பாகுபாடு காட்டும் அனைத்து சட்டங்களையும் ரத்து செய்யவும், மற்றும் பாகுபாடு-எதிர்ப்புச் சட்டங்களை இயற்ற வேண்டும் என அரசுகளை அழைத்தது. இது மட்டுமன்றி விஞ்ஞான சான்றுகள் மற்றும் மனித உரிமைகள் தரநிலைகளின் அடிப்படையில் விரிவான, துல்லியமான மற்றும் வயதுக்கு ஏற்ற தகவல்களைக் கொண்ட மாணவர்களுக்கான கட்டாய பாலியல் கல்வி பாடத்திட்டத்தை உருவாக்குமாறு CRC குழு அரசுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

குழுவின் கூற்றுப்படி, அத்தகைய பாடத்திட்டத்தில் பால்நிலை சமத்துவம், பால்நிலை பன்முகத்தன்மை, பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார உரிமைகள், பொறுப்பான பெற்றோராக இருத்தல் மற்றும் பாலியல் நடத்தை மற்றும் வன்முறை தடுப்பு, அத்துடன் திட்டமிடப்படாத முன்கூட்டிய கர்ப்பம் மற்றும் பாலியல் நோய்த்தொற்றுகளைத் தடுப்பது போன்ற விவரங்கள் கொண்டதாக இருக்க வேண்டும்.

2018 இல் இலங்கை தொடர்பாக CRC குழு SOGIE அடிப்படையிலான பாகுபாடு மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து தனது கவனத்தை எழுப்பியது. அதன் இறுதி அவதானிப்புகளில், தன்பாலீர்ப்பு பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர், திருநர் மற்றும் இடையிலிங்கத்தவர் உட்பட ஒடுக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள சிறுவர்களுக்கு எதிரான பாகுபாட்டை அகற்றுவதற்கான உறுதியான சமூக நடவடிக்கைகள் உட்பட, சிறுவர்கள் மற்றும் 'தன்பாலீர்ப்பு பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ளோர், திருநர் மற்றும் இடையிலிங்க சிறுவர்களுக்கு எதிரான பாகுபாட்டை எதிர்த்து, ஒருமித்த ஒரே பால்நிலை, பாலியல் செயல்கள் உட்பட, சட்ட அமலாக்குனர்களால் திருநர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்கவும், LGBT சிறுவருக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் உட்பட வன்முறையில் ஈடுபடுபவர்களைக் சட்டத்தின் முன்கொண்டு வரவும் நன்கு இலக்கு வைக்கப்பட்ட செயல்களைக் கொண்ட ஒரு செய ற்றிறன்மிக்க மற்றும் விரிவான மூலோபாயத்தை ஏற்றுக்கொள்வதற்கு குழு பரிந்துரைத்தது.

> **அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களிலும் இலங்கை ஒரு தரப்பினராக கைச்சாத்திட்டதுள்ளது. எனவே, இந்த உடன்படிக்கைகளின் கீழான உரிமைகள், அனைத்து இலங்கையர்களுக்கும் பொருந்துபவனவாகும்**

2007 ஆம் ஆண்டின் யோக்கியகர்த்தா விதிமுறைகளின் 16 ஆவது விதிமுறை (SOGIE சம்பந்தமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கான விதிமுறைகளின் தொகுப்பாகும்) மற்றும் 2017 ஆண்டின் பிளஸ் (+) 10 யோக்யகர்த்தா விதிமுறைகள் ஆகியவை கல்விக்கான உரிமை மற்றும் அனைத்து மாணவர்களையும் வேறுபடுத்தலின்றி சமமாக நடத்துவதன் கடமை மீதான சர்வதேச சட்டக் கடமைகளை மேலும் உறுதிப்படுத்துவதோடு SOGIE அடிப்படையிலான கொடுமைப்படுத்துதல் மற்றும் வன்முறைகளை தடுப்பதற்கு அனைத்து அரசுகளையும் கோருகின்றது.

## முன்னோக்கி செல்லுதல்

பாதிக்கப்பட்ட LGBT மாணவர்கள், தங்கள் உரிமைகளைப் பற்றி அறியாதவர்கள் மற்றும்/ அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் களங்கம் மற்றும் துஷ்பிரயோகம் காரணமாக தங்கள் SOGIE ஐ வெளிப்படுத்த பயப்படுபவர்களாவர். அத்தகைய மாணவர்கள் மௌனமாக தங்களுக்குள் அவதிப்படுகின்றனர்.

ஒப்புதலுடன்கூடிய ஒரே பால்நிலை பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்குவதானது, LGBT நபர்கள், மாணவர்கள் உட்பட, அவர்களின் இயல்பு மற்றும் இருப்பு, மேலும் 'சட்டவிரோதம்' என்று சட்டபூர்வமாக முத்திரை குத்துவதிலிருந்து அச்சம் இல்லாமல் வாழ்வதற்கு மேற்கொள்ளக்கூடிய அவசியமான முதல்படி நடவடிக்கையாகும். SOGIE இனை அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமை - அத்தியாயத்தில் தடைசெய்யப்பட்ட பாகுபாடு அடிப்படைகளில் ஒன்றாக சேர்ப்பது மற்றும்/அல்லது தடைசெய்யப்பட்ட பாகுபாடு அடிப்படைகளில் SOGIE ஐ உள்ளடக்கிய ஒரு தனியான பாகுபாடு எதிர்ப்புச் சட்டத்தை இயற்றுவதானது LGBT நபர்கள் இலங்கையில் உள்ள அனைவருடனும் சமத்துவம் என்ற அடிப்படையில் மனித உரிமைகளை சுதந்திரமான அனுபவிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும்.

கொடுமைப்படுத்துதலுக்கு எதிரான கொள்கைகள் மற்றும் சட்டங்களை இயற்றுதல், SOGIE பற்றிய பயிற்சிகள் உட்பட ஆசிரியர்களின் தொழில்முறை மேம்பாடு மற்றும் கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான தேவையான கருவிகள், பகடிவதை எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்துதல் மற்றும் விரிவான பாடத்திட்டத்துடன், சர்வதேச மனித உரிமைகள் தரங்களுடன் ஒத்துப்போகும் விதத்தில் பாலியல்கள் மற்றும் பால்நிலையின் பன்முகத்தன்மை பற்றியபாலியல் கல்வி போன்றன LGBT மாணவர்களுக்கு ஆதரவான சூழலை உருவாக்கி அவர்கள் பயமின்றி வாழ உதவும் பிற அடிப்படை காரணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானநடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வது LGBT மாணவர்கள் தங்களை பாதுகாப்பாக உணரவும், பாடசாலையில் அவர்களின் வருகையை அதிகரிக்கவும் வழிவகுக்கும். இலங்கையில் உள்ள LGBT மாணவர்கள் பல தசாப்தங்களாக சமூகத்தில் கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றை சகித்துகொண்டு வாழ்ந்து வருகின்றனர். எனவே, அரசு தலையிட்டு அவ்வாறானோரை பாதுகாக்க வேண்டிய தருணம் இதுவே என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அடுத்த பயணம் சூரியனுக்கு

சூரியனை ஆய்வு செய்யும் முதல் விண்வெளி அடிப்படையிலான இந்திய ஆய்வகமான ஆதித்யா-எல்1 (Aditya L1) ஏவுவதற்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) தயாராகி வருகிறது. பெங்களூரு யூ ஆர் ராவ் செயற்கைக்கோள் மையத்தில் இருந்து (URSC) இந்த செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



ஆதித்யா-எல்1 சூரியனை ஆய்வு செய்யும் முதல் விண்வெளி அடிப்படையிலான இந்தியப் பணியாகும். பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கிமீ தொலைவில் உள்ள சூரிய-பூமி அமைப்பின் லாக்ரேஞ்ச் புள்ளி 1 (L1) ஐச் சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் விண்கலம் வைக்கப்படும்.

எல்1 புள்ளியைச் சுற்றியுள்ள ஒளிவட்டப் பாதையில் வைக்கப்படும் செயற்கைக்கோள், சூரியனை எந்த மறைவும் இல்லாமல் தொடர்ந்து பார்ப்பதன் முக்கிய நன்மையைக் கொண்டுள்ளது. இது சூரிய செயல்பாடுகள் மற்றும் விண்வெளி வானிலையில் அதன் தாக்கத்தை உண்மையான நேரத்தில் கவனிப்பதில் அதிக நன்மையை வழங்கும்.

## பெங்களூரு

## வன்புணர்வு செய்ய முடியாததால் கொலை




பெங்களூரு மகாதேவபுரா பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கலபுரகியை சேர்ந்த 21 வயது இளம்பெண் கடந்த 11-ந் திகதி கொலை செய்யப்பட்டு இருந்தார். அந்த இளம்பெண்ணை கொலை செய்ததாக பக்கத்து வீட்டில் வசிக்கும் காவலாளியான கிருஷ்ணாவை மகாதேவபுரா பொலிஸார் கைது செய்திருந்தார்கள்.

அப்போது இளம்பெண்ணை அவர் கற்பழிக்க முயன்றதும், அவர் சத்தம் போட்டு கூச்சலிட்டதால் கழுத்தை நெரித்து கொன்றதும் தெரியவந்தது.

இளம்பெண்ணும், கிருஷ்ணாவின் மனைவியும் ஒரே பெட்ரோல் விற்பனை நிலையத்தில் தான் வேலை பார்த்து வந்துள்ளனர். பக்கத்து வீட்டில் வசித்ததால் இளம்பெண்ணை அடையவும் திட்டமிட்டுள்ளார்.

அன்றைய தினம் கிருஷ்ணாவின் மனைவி பெட்ரோல் விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு சென்றிருக்கிறார். நள்ளிரவு 12 மணிக்கு மேல் தான் அவர் வேலை முடிந்து வீட்டுக்கு வருவதாக சொல்லி இருந்தார். இதனால் வீட்டில் தனியாக இருந்த கிருஷ்ணா, அங்கு நின்ற இளம்பெண்ணிடம் பேசி தனது வீட்டுக்கு அழைத்துள்ளார்.

பின்னர் கதவை பூட்டிவிட்டு இளம்பெண்ணை கற்பழிக்க முயற்சித்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவரை கழுத்தை நெரித்து கிருஷ்ணா கொலை செய்திருக்கிறார்.



## உலகின் மிகப்பெரிய அணிலா?

இந்திய வனத்துறை அதிகாரி பர்வீன் கஸ்வான்வன விலங்குகள் பற்றிய சுவாரசியமான தகவல்களை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகிறார். அந்த வகையில் அவர் தற்போது X தளத்தில் (டுவிட்டர்) பகிர்ந்துள்ள ஒரு படத்தில் ராட்சத அணில் ஒன்று மரத்தின் மேலே அமர்ந்துள்ளது.

அந்த படத்துடன் அவரது பதிவில், உலகின் மிகப்பெரிய அணில் இனங்களில் ஒன்று இந்தியாவில் காணப்படுகிறது. உங்களால் அடையாளம் காண முடியுமா? எனக் கேட்டு அந்த படத்திற்கு தலைப்பிட்டிருந்தார்.

## கர்நாடகா

## இறுதிச் சடங்கிற்கு வந்துவிடு: காதலிக்கு காதலன் அழைப்பு

தனது இறுதிச் சடங்கிற்கு வந்து விடுமாறு காதலிக்கு அழைப்பு விடுத்த காதலன் வெளியிட்டுள்ள வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

கர்நாடகா மாநிலம் பெங்களூரு அருகே உள்ள தபஸ்பேட் பகுதியைச் சேர்ந்தவர் கிரண். கடந்த சில நாட்களுக்கு முன் கிரணை வெறிநாய் ஒன்று கடித்துள்ளது. இதையடுத்து அவர் அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முன்னதாக காதலன் கிரண் வீடியோ ஒன்றை மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது வெளியிட்டு இருக்கிறார். அதில் பேசிய கிரண், தனது இறுதிச்சடங்குக்கு வரும் காதலிக்கு உருக்கமாக வேண்டுகோளை விடுத்து இருக்கிறார்.

## 203 நாடுகளை சுற்றி வந்த நபர்

ஒவ்வொரு நாட்டையும் சுற்றி வர வேண்டும் என்றால் விமானம், கப்பல், ரயில், கார் என அனைத்து மார்க்கமாகவும் நாம் பயணிக்க வேண்டும் என்று நினைத்து கொண்டிருப்போம். ஆனால் டென்மார்க்கை சேர்ந்த தார் பீட்டர்சன் என்ற நபர் ஒருமுறை கூட விமானத்தில் பயணம் செய்யாமல் 202 நாடுகளை வலம் வந்திருக்கிறாராம்.



உலகை சுற்றி வரும் பயணத்தை 2013ஆம் ஆண்டில் தொடங்கிய இவர், 202 நாடுகளை நிறைவு செய்து கடந்த மே 24ஆம் தேதி மாலத்தீவை அடைந்துள்ளார். அது 203ஆவது நாடு ஆகும். அங்கிருந்து எம்வி மிலான் மர்ஸ்க் என்ற மாபெரும் சரக்கு கப்பல் மூலமாக தாய் நாடான டென்மார்க் நோக்கி புறப்பட்டு, 33 நாள் பயணத்திற்கு பிறகு இலக்கை அடைந்துள்ளார்.

உலகின் அனைத்து நாடுகளையும் சுற்றி பார்க்காமல் வீடு திரும்புவதில்லை என்றும், ஒவ்வொரு நாட்டிலும் குறைந்தபட்சம் 24 மணி நேரமாவது தங்கியிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்து அதன்படி பயணத்தை நிறைவு செய்துள்ளார்.

ஐ.நா. அமைப்பு உலகில் 195 நாடுகளை அங்கீகரித்துள்ளது. இந்த நாடுகள் மற்றும் பகுதியளவு அங்கீகாரம் பெற்ற பிராந்தியங்களையும் சேர்த்து மொத்தம் 203 நாடுகளுக்கு பீட்டர்சன் பயணித்துள்ளார். இந்த பயணத்தை மேற்கொள்ள அவருக்கு 3,500 நாட்கள் தேவைப்பட்டிருக்கிறது.

## அவுஸ்திரேலியா

## காளான் உண்ட 3 பேர் உயிரிழப்பு

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் லியோங்கதா என்ற பகுதியில் கடந்த ஜூலை 29 ஆம் திகதியன்று ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் வீட்டில் மதிய உணவாக காளான் உண்ட நிலையில் அவர்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.



தகவல் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில் அதே வீட்டில் இருக்கும் மற்றொரு பெண் நான்கு பேருக்கும் உணவு சமைத்து பரிமாறியிருக்கிறார். ஆனால் அவர் சாப்பிடவில்லை. எனவே அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியிருக்கிறார்கள்.

வீட்டிற்கு வெளியே இருந்த ஊடகங்களிடம் பேசிய அந்தப் பெண், நான்கு பேரும் தனக்கு மிகவும் பிரியமானவர்கள் என்றும் அவர்களுக்கு எதிராக தான் ஒன்றும் செய்யவில்லை என்றும் கூறியிருக்கிறார்.



எல்.பி.எல்:

## பி-லவ் கண்டியை வென்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பி-லவ் கண்டியுடனான போட்டியில் கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரைக்கர்ஸ், ஆரம்பத்தில் பாபர் அஸாம், லஹிரு உதாரவை அஞ்சலோ மத்தியூஸிடம் இழந்தபோதும் பதும் நிஸங்கவின் 51 (38), நிபுன் தனஞ்சயவின் 40 (29) ஓட்டங்களோடு ஓட்டங்களைப் பெற்று பின்னர் இவர்கள் இருவரும் சத்துரங்க டி சில்வா, அணித்தலைவர் வனிடு ஹஸரங்கவிடம் வீழ்ந்தபோதும் அணித்தலைவர் சாமிக கருணாரத்னவின் 17 (09), நுவனிடு பெர்ணாண்டோவின் 15 (09) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 170 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கண்டி ஆரம்பத்தில் நசீம் ஷா, இஃப்திஹார் அஹ்மட்டிடம் விக்கெட்டுகளை இழந்ததுடன் பின்னர் வேகமாக 40 (21) ஓட்டங்களைப் பெற்ற ஹஸரங்க, சத்துரங்க டி சில்வா, மத்தியூஸை ஜெஃப்ரி வன்டர்சே (2), கருணாரத்னவிடம் இழந்தது. பின்னர் ஆசிப் அலி 33 (15), அஷேன் பண்டார 22 (18) ஓட்டங்களுடன் போராடியபோதும் இவர்களை மதீஷ பத்திரணவிடம் இழந்ததோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களையே பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக நிஸங்க தெரிவானார்.

முன்னதாக நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸை கோல் டைட்டான்ஸ் வீழ்த்தியிருந்தது.

இந்நிலையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி லீக் போட்டியில் ஸ்ரைக்கர்ஸை டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



மீராவோடை இளம்பிறை விளையாட்டுக் கழகத் தொடர்:

## சம்பியனானது ஓட்டமாவடி றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்

அஸ்ஹர் இப்றாஹீம்

மீராவோடை இளம்பிறை விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் ஓட்டமாவடி றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மாஞ்சோலை அல் இஹ்ஸான் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அணிக்கு எட்டுப் பேரைக் கொண்ட 5 ஓவர்கள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே றேஞ்சர்ஸ் சம்பியனானது.

இறுதிப் போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராக றேஞ்சர்ஸின் அணித்தலைவர் ஏ.எல.எம். றிபாஸ் தெரிவானதுடன், நாயகனாக அதேயணியின் என்.எம்.எம். றிஸ்மின் தெரிவானார்.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான எல்லே:

## வெற்றி வாகை சூடிய அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

வட மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டியில் எல்லேயில் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வெற்றி வாகை சூடியுள்ளது.

தமது இறுதிப் போட்டியில் மன்னார் சென். சேவியர் கல்லூரியை வென்றே யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, முதற்தடவையாக மாகாண மட்டத்தில் இவ்வெற்றியை அடைந்தது.

இப்போட்டியில் சென். சேவியர் 40 பந்துகளில் எட்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில், அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 40 பந்துகளில் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றே சம்பியனாகியது.




இந்தியாவுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்

இந்தியாவுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதல் முதலிரண்டு போட்டிகளை மேற்கிந்தியத் தீவுகளும், அடுத்த இரண்டு போட்டிகளை இந்தியாவும் வென்ற நிலையிலேயே புளோரிடாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஐந்தாவது போட்டியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள், 3-2 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 165/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 61 (45), திலக் வர்மா 27 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: றொமரியோ ஷெப்பர்ட் 4/31 [4], அகீல் ஹொஸைன் 2/24 [4], றொஸ்டர் சேஸ் 1/25 [4], கைல் மேயர்ஸ் 0/4 [1])

மே. தீவுகள்: 171/2 (18 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரண்டன் கிங் ஆ.இ 85 (55), நிக்கலஸ் பூரான் 47 (35), ஷே ஹோப் ஆ.இ 22 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்தீப் யாதவ் 0/18 [4])

போட்டியின் நாயகன்: றொமாரியோ ஷெப்பர்ட்

தொடரின் நாயகன்: நிக்கலஸ் பூரான்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 15 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.